# இயல்புகூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான காம்பேக்டர் லாரி (Compactor Lorry) TN74 AS 5646-ற்கு மின்கலப்பெட்டி (12 roil 100 Amps) 1 வாங்குவதற்கு ஓட்டுநர் விண்ணப்பத்தின் பேரிலும், வாகன பொறுப்பாளர், உதவி பொறியாளர், மாநகர பொறியாளர் ஆகியோர்களின் ஒப்புதலின் பேரிலும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.7,000/-ற்கும், பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், விலைப்புள்ளி கோரவும், மன்றத்தின் ஒப்புதலுக்காகவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரி அறிவிப்பு வெளியிட்டதையும் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.878/2019/எச்4

**தீர்மானம் எண்.414 – அங்கீகரிக்கப்பட்டது**

2. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான வாகனம் (Jeep) TN74 AL 1852 –ற்கு A/C Regulator Fan Assembly Set பழுதடைந்துள்ளதை உடனடியாக சரி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதின் காரணமாக ரூ.7,600/- செலவில் சரி செய்யப்பட்டது. எனவே மேற்படி தொகைக்கும், பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ரூ.7,600/- செலவு செய்யப்பட்டதற்கும், ஓட்டுநரால் மேற்படி தொகை செலவழிக்கப்பட்டதால் அன்னாருக்கு வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.11925/2019/எச்4

**தீர்மானம் எண்.415 – அங்கீகரிக்கப்பட்டது**

3. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-2020-ன் கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, வாகையடி தெருவில் வவ்வால் மரம் அருகே தடுப்புசுவர் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/3120/2019, நாள்.27.06.2020-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 22.07.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | V.Nகண்ஸ்டிரக்சன்ஸ் | மதிப்பீட்டை விட 23.00% குறைவு |
| 2 | திரு.டேவிட் வறுவேல் அந்தோணி மிக்கேல் | மதிப்பீட்டை விட 4.00% குறைவு |
| 3 | திரு.Nசதீஷ் | மதிப்பீட்டை விட 0.18% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u> – பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 23.00% குறைவாக கொடுத்துள்ள V.Nகண்ஸ்டிரக்சன்ஸ் என்பவருக்கு கூடுதல் வைப்புதொகை ரூ.8,640/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.26/2020-2021

**தீர்மானம் எண்.416 – அங்கீகரிக்கப்பட்டது**

4. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-2020-ன் கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23, பள்ளிவிளை ஆர்.சி.சர்ச்க்கு செல்லும் அனந்தனார் ஆற்றங்கரையில் தடுப்பு கம்பி அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/3120/2019, நாள்.27.06.2020-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 22.07.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | V.Nகண்ஸ்டிரக்சன்ஸ் | மதிப்பீட்டை விட 21.56% குறைவு |
| 2 | திரு.டேவிட் வறுவேல் அந்தோணி மிக்கேல் | மதிப்பீட்டை விட 2.74% குறைவு |
| 3 | திரு.Nசதீஷ் | மதிப்பீட்டை விட 4.05% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u> – பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 21.56% குறைவாக கொடுத்துள்ள V.Nகண்ஸ்டிரக்சன்ஸ் என்பவருக்கு கூடுதல் வைப்புதொகை ரூ.33,676/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.25/2020-2021

**தீர்மானம் எண்.417 – அங்கீகரிக்கப்பட்டது**

5. இம்மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையிலுள்ள நீரேற்று நிலையம் 120 HP Vertical turbine motor pump-ம் unit 2-லுள்ள Pump மற்றும் Delivery Pipe Line (400 mmØ) NRV (Non-Return Valve-ம் மற்றும் 60 HP Centrifugal pump unit 1-லுள்ள 300 mm pipe foot valve ஆகிய இரண்டு எண்ணம் பழுதடைந்ததை சரிசெய்தற்கு 29.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார் ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவு (ரூபாய் 2,36,850/-) |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.T.அசோக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.3383/2020/இ1

**தீர்மானம் எண்.418 – அங்கீகரிக்கப்பட்டது**

6. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13, சாஸ்த்தான் கோவில் தெருவில் கழிவு நீர் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு அப்பகுதியில் கழிவு நீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதால் மேற்படி பகுதியில் கழிவு நீரோடை மற்றும் சிறு பாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.42,000/-க்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6329/2020/இ1

## தீர்மானம் எண்.419 – அங்கீகரிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான கோணம் பாலிடெக்னிக் கல்லூரியினை COVID – 19 தற்காலிக வார்டாக மாற்றம் செய்யவும், கொரோனா பாதித்த மக்களுக்கு சிகிட்சை அளிக்கும் விதமாக அடிப்படை வசதிகள் செய்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,90,000/-க்கு (ஏழு லட்சத்தி தொண்ணுாறாயிரம்) அனுமதியும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் ஒப்பந்ததாரர் திரு.விஜயகுமார் என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்க்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்க்கொண்டமைக்கு உண்டான பணி செலவு சீட்டு வகையறாக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு அனுப்பவும், மேற்படி தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொரோனா சிறப்பு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் இச்செலவினத்தொகையினை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6755/2020/இ1

## தீர்மானம் எண்.420 – அங்கீகரிக்கப்பட்டது

8. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்-19 (Covid-19) முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி ஆசாரிபள்ளம் Bell-field school (Private) தேர்வு செய்து கொரோனா பாதித்தவர்களை தனிமைப்படுத்துதல் சிகிட்சை மேற்க்கொள்ளவும் முகாம் (Camp) அமைக்கவும், பள்ளியில் பயனாளிகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.1,50,000/- (ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம்) –க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் ஒப்பந்ததாரர் திரு.ஜென்கின்ஸ என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்க்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்க்கொண்டமைக்கு உண்டான பணி செலவு சீட்டு வகையறாக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு அனுப்பவும், மேற்படி தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொரோனா சிறப்பு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் இச்செலவினத்தொகையினை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5970/2020/இ1

## தீர்மானம் எண்.421 – அங்கீகரிக்கப்பட்டது

9. இம்மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் அரசு ஆயுர்வேதா மற்றும் சித்தா மருத்துவ கல்லூரியில் COVID -19 பாதித்த மக்களுக்கு சிகிட்சை அளிக்கும் விதமாக ஏற்கனவே உள்ள 2 கட்டிடங்களில் வர்ணம் பூசுதல், குடிநீர் வசதி, கழிவறை மற்றும் மின்வசதிகள் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.12,50,000/-க்கு (பனிரெண்டு லட்சத்தி ஐம்பதாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் ஒப்பந்ததாரர் திரு.கண்ணன் என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்க்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்க்கொண்டமைக்கு உண்டான பணி செலவு சீட்டு வகையறாக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு அனுப்பவும், மேற்படி தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொரோனா சிறப்பு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் இச்செலவினத்தொகையினை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6757/2020/இ1

**தீர்மானம் எண்.422 – அங்கீகரிக்கப்பட்டது**

10. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான கோணம், அரசு கலை அறிவியல் கல்லூரியில் கோவிட் -19 பாதித்த மக்களுக்கு சிகிட்சை அளிக்க தற்காலிக வார்டாக மாற்றம் செய்யவும், மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,50,000/-க்கு (இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம்) அனுமதியும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் ஒப்பந்ததாரர் திரு.விஜயகுமார் என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்க்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்க்கொண்டமைக்கு உண்டான பணி செலவு சீட்டு வகையாறாக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு அனுப்பவும், மேற்படி தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொரோனா சிறப்பு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் இச்செலவினத்தொகையினை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6017/2020/இ1

**தீர்மானம் எண்.423 – அங்கீகரிக்கப்பட்டது**

11. இம்மாநகராட்சிக்குட்பட்ட SLB அரசு மேல்நிலைப்பள்ளியின் வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் COVID -19 பாதித்த மக்களுக்கு தனிமைப்படுத்தவும், சிகிட்சை மேற்க்கொள்ளவும், முகாம் (Camp) அமைக்கவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி பயனாளிகளுக்கான அடிப்படை வசதிகள் (கழிவறை, குடிநீர்) மற்றும் இதர வசதிகள் செய்து கொடுக்கவும், தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.22,50,000/-க்கு (,இருபத்தி இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம்) அனுமதியும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் ஒப்பந்ததாரர் திரு.ஜெங்கின்ஸ் என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்க்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்க்கொண்டமைக்கு உண்டான பணி செலவு சீட்டு வகையறாக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு அனுப்பவும், மேற்படி தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொரோனா சிறப்பு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் இச்செலவினத்தொகையினை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6016/2020/இ1

**தீர்மானம் எண்.424 – அங்கீகரிக்கப்பட்டது**

12. இம்மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் அரசு ஆயுர்வேதா மற்றும் சித்தா மருத்துவகல்லூரியில் COVID -19 பாதித்த மக்களுக்கு சிகிட்சை அளிக்கும் விதமாக கூடுதலாக 100 இருக்கைகள் அமைக்கப்பட உள்ளதால் அதற்கு தேவையான கழிவறை வசதி, குடிநீர் வசதி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,00,000/-க்கு (,நான்கு லட்சம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் ஒப்பந்ததாரர் திரு.T.துரை என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்க்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்க்கொண்டமைக்கு உண்டான பணி செலவு சீட்டு வகையறாக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு அனுப்பவும், மேற்படி தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொரோனா சிறப்பு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் இச்செலவினத்தொகையினை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6756/2020/இ1

**தீர்மானம் எண்.425 – அங்கீகரிக்கப்பட்டது**

13. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, ஊட்டுவாழ்மடம் வசந்நகர் பகுதியில் புதிதாக ஒரு தெருவிளக்கு அமைக்க அனுமதியும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1/2020/இ4

**தீர்மானம் எண்.426 – அங்கீகரிக்கப்பட்டது**

14. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.46-ல் சிதம்பரநாதன் தெருவில் அரசு விருந்தினர் மாளிகை எதிர்புறம் உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் புதிதாக பாலம் அமைத்திட கடந்த 15.07.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Rஜெங்கின்ஸ் | மதிப்பீட்டை விட 0.50% குறைவு |
| 2 | திரு.Rவிஜயகுமார் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u> - பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி திரு.Rஜெங்கின்ஸ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.50% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.24/2020-2021

**தீர்மானம் எண்.427 – அங்கீகரிக்கப்பட்டது**

15. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட செட்டிதெரு, D.V.D பள்ளி அருகில் மாநகராட்சியால் அமைக்கப்பட்ட நியாயவிலை கடை பழுது ஏற்பட்டு உள்ளதால் அதனை சரி செய்யவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.70,000/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அனுமதிக்கலாம்

கோப்பு எண்.6668/2020/இ1

**தீர்மானம் எண்.428 – அங்கீகரிக்கப்பட்டது**

16. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி பேருந்து நிலையத்தில் கொரோனா முன்னெச்சரிக்கை காரணமாக தற்காலிக சந்தை அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்த நிலையில் காய்கறி வியாபாரிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை தொடர்ந்து சந்தை மூடப்பட்டு பொதுமக்கள் நுழையாது இருக்க Tin Sheet- கொண்டு அடைக்கவும், அருந்ததியார் காலனியை சுற்றியும் Net அமைக்கவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.41,000/-க்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6328/2020/இ1

**தீர்மானம் எண்.429 – அங்கீகரிக்கப்பட்டது**

17. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான கோணம் பொறியியல் கல்லூரியில் COVID -19 பாதித்த மக்களுக்கு சிகிட்சை அளிக்கும் விதமாக COVID -19 Centre ஆக மாற்றம் செய்து அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,50,000/-க்கு அனுமதியும், (எட்டு லட்சத்தி ஐம்பதாயிரம்) பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் ஒப்பந்ததாரர் திரு.ஜென்கின்ஸ் என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொண்டமைக்கு உண்டான பணி செலவு சீட்டு வகையறாக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு அனுப்பவும், மேற்படி தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கொரோனா சிறப்பு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் இச்செலவினத்தொகையினை மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6754/2020/இ1

**தீர்மானம் எண்.430 – அங்கீகரிக்கப்பட்டது**

18. இம்மாநகராடசிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் யாதவர் தெரு, அருகுவிளை ரோடு, சந்திப்பு D.No: 44DEB, Pole மற்றும் D.No:63, Near Pump Room ஆகிய மூன்று இடங்களில் முக்கடல் அணையில் இருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வரும் 400 mm Q பிரதான குழாய்யில் பழுது ஏற்பட்டு குடிநீர் விரயம்யாகிறது அதனை சரி செய்ய உத்தேச செலவினம் தொகை ரூ.27000/-க்கு (இருபத்தி ஏழாயிரம்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு

எண்.6747/2020/இ2

**தீர்மானம் எண்.431 – அங்கீகரிக்கப்பட்டது**

19. இம்மாநகராட்சிக்குட்பட்ட மகளிர் கிருஸ்தவ கல்லூரி பின்புறம் டென்னிசன் சாலை சந்திப்பில் 400 mmQ PSC Pipe Pumping main பழுது ஏற்பட்டு குடிநீர் வீணாவதுடன், அனாதைமடம், தட்டான்விளை, ஹோலிகிராஸ், ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் நீரேற்றம் செய்யும் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.53,500/-க்கு (ஐம்பத்தி மூன்றாயிரத்தி ஐநூறு) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டம் 2019-ன் பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணியினை திரு.T.அசோக்குமார் ஒப்பந்ததாரர் என்பவர் மூலம் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு

எண்.6409/2020/இ2

## தீர்மானம் எண்.432 – அங்கீகரிக்கப்பட்டது

20. இம்மாநகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணனிகள் மடிகணனிகள், பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் மற்றும் தொடர்புடைய இதர பொருடகள் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 29.07.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | MAATHARASI<br>Computer, Nagercoil | மதிப்பீட்டை விட 11.52% குறைவு |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 11.52% குறைவாக கொடுத்துள்ள MAATHARASI Computer, Nagercoil என்பவருக்கு கூடுதல் வைப்புத்தொகை ரூ.7,600/- செலுத்திய பின்னர் ஓராண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதித்து வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.1316/2020/இ3

## தீர்மானம் எண்.433 – அங்கீகரிக்கப்பட்டது

21. பிரதான் மந்திரி மக்கள் வளர்ச்சி நிரல் (PMJVK) திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சி பகுதியில் 6 எண்ணம் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் கடிதம் எண்.T3/2175/2020 நாள்.24.07.2020-ன் படி ரூ.45.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட இடங்களில் அங்கன்வாடி மையம் அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **அங்கன்வாடி அமையவுள்ள இடம்** | **மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | கோட்டவிளை | ரூ.7.50 |
| 2 | பெருவிளை | ரூ.7.50 |
| 3 | நெசவாளர் காலனி | ரூ.7.50 |
| 4 | வாட்டர்டேங் சாலை | ரூ.7.50 |
| 5 | காந்திபுரம் செட்டிதெரு | ரூ.7.50 |
| 6 | புத்தன் பங்களா சாலை | ரூ.7.50 |
| | **மொத்தம்** | **ரூ.45.00** |

மேற்கண்ட இடங்களில் உள்ள பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையங்கள் அப்புறப்படுத்தி புதிதாக அதே இடத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க இருப்பது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு-** மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.7949/2019/இ3

## தீர்மானம் எண்.434 – அங்கீகரிக்கப்பட்டது

22. இம்மாநகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020-2021-ன் கீழ் சாலை பராமரிப்பு பணிகள் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்த வகைக்கு Accord Advertising Agencies, Chennai நிறுவனத்திற்கு விளம்பர கட்டணம் ரூ.24,780/- வழங்க மன்றத்தின் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்..

கோப்பு

எண்.4007/2020/இ3

## தீர்மானம் எண்.435 – அங்கீகரிக்கப்பட்டது

23. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட புதுகுடியிருப்பு டிஸ்டில்லரி சாலை ஓட்டுபுரை தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் சேகரமாகும் மழை நீரானது நாகராஜா கோவில் கிழக்கு வாசல் முன்புறம் உள்ள மழைநீர் வடிகால் மூலம் ஆராட்டு ரோடு வழியாக பழையாற்றில் கலக்கிறது. தற்போது மேற்படி மழைநீர் வடிகால் மண் மற்றும் சகதி நிறைந்து காணப்படுவதால் மழைநீர் தாழ்வான பகுதியில் புகுந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பற்ற தன்மை ஏற்படுகிறது. மேலும் வடகிழக்கு பருவமழை ஆரம்பாக உள்ள நிலையில் நாகராஜா கோவில் அணுகு சாலையில் இருந்து சபரிஸ் மருத்துவமனை வரையுள்ள மழைநீர் வடிகாலில் மண் அகற்றுவதற்கும் அதற்கான செலவீனம் ரூ.2,50,000/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6925/2020/இ1

## தீர்மானம் எண்.436 – அங்கீகரிக்கப்பட்டது

24. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட CBH முன்புறம் இருந்து பழையாறு வரையுள்ள காங்கேயன் ஓடை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் சேகரமாகும் மழைநீரானது பாலமோர் சாலையில் உள்ள வாறுகாலின் வழியாக பழையாற்றில் கலக்கிறது. தற்போது மேற்படி மழைநீர் வடிகால் மண் மற்றும் சகதி நிறைந்து மழைநீர் தாழ்வான பகுதியில் புகுந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பற்ற தன்மை ஏற்படுகிறது. மேலும் வடகிழக்கு பருவமழை

ஆரம்பமாக உள்ள நிலையில் CBH முன்புறம் இருந்து பழையாறு வரையுள்ள காங்கேயன் ஓடையில் மண் மற்றும் சகதி அகற்றுவதற்கும் அதற்கான செலவீனம் ரூ.5,00,000/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6924/2020/இ1

## தீர்மானம் எண்.437 – அங்கீகரிக்கப்பட்டது

25. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் அம்ரூத் திட்ட பணிகளின் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டதில் ஏற்பட்ட சேதாரத்தை சீரமைப்பு செய்யும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் முதல் வெட்டூர்ணிமடம் வரை Phase II ஒட்டு பணி (Patch work) செய்திட கடந்த 30.06.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார் | மதிப்பீட்டை விட 19.50% குறைவு |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 19.50% குறைவாக கொடுத்துள்ள திரு.T.அசோக்குமார் என்பவருக்கு கூடுதல் வைப்புத்தொகை ரூ.2,14,730/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

மதிப்பீட்டு எண்.18/2020-2021

## தீர்மானம் எண்.438 – அங்கீகரிக்கப்பட்டது

26. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் அம்ரூத் திட்ட பணிகளின் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டதில் ஏற்பட்ட சேதாரத்தை சீரமைப்பு செய்யும் பணிக்கு ரூ.19.40 இலட்சம் மதிப்பீட்டி வடசேரி கிராம நிர்வாக அலுவலகம் முதல் ஒழுகினசேரி வரை Phase III ஒட்டு பணி (Patch work) செய்திட கடந்த 30.06.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார் | மதிப்பீட்டை விட 19.50% குறைவு |

**அலுவலககுறிப்பு-** பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 19.50% குறைவாக கொடுத்துள்ள திரு.T.அசோக்குமார் என்பவருக்கு கூடுதல் வைப்புத்தொகை ரூ.1,67,018/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

மதிப்பீட்டு எண்.19/2020-2021

## தீர்மானம் எண்.439 – அங்கீகரிக்கப்பட்டது

27. இம்மாநகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை கடைபிடிக்க வேண்டிய நிலையில் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு, மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கொரோனா வைரஸ் தடுப்பு தொடர்பாக சில அறிவுரைகளின்படி வெளியில் அத்தியாவசிய பொருட்கள் வாங்க வரும் பொதுமக்கள் கட்டாயமாக முககவசம் (Mask) அணிய வேண்டும். அதனை கடைபிடிக்காமல் முககவசம் (Mask) அணியாமல் வருவோர்களுக்கும், மற்றும் பொது இடங்களில் எச்சில் துப்பினாலும் அபராதம் விதிக்கவும், மேலும் மாநகராட்சி பகுதியில் இயங்கும் சிறு வணிக நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வரும் பொதுமக்கள் சமூக இடைவெளியினை கடைபிடிக்காதபட்சத்தில் சம்மந்தப்பட்டவர்களுக்கு அபராதத்தொகை விதித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் மேலும் ஒரு கடைக்கு இருமுறை அபராதம் விதிக்கப்பட்டும் மீண்டும் தொடர்ந்து சமூக இடைவெளி கடைபிடிக்காத பட்சத்தில் பேரிடர் மேலாண்மை விதி 2005-ன் படி பிரிவு 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60 மற்றும் 65-ன் கீழ் மாநகராட்சி நிர்வாகம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு சிறு வணிக நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூடுவதற்கும் மாமன்ற தீர்மானம் எண்.250, நாள்.30.04.2020 மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.278, நாள்.08.05.2020 ஆகிய தேதிகளில் அங்கீகரித்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு அரசிதழ் எண்.364 மற்றும் 365 நாள்.04.09.2020 மற்றும் அரசாணை எண்.(Ms) No.326 சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் (AB2) துறை, நாள்.04.09.2020-இன் படி புதிய கட்டண திருத்த அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்டுள்ள விவரப்படியாக அபராத தொகை விதிக்கும் பொருட்டு மாமன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | தனிமைபடுத்தப்பட்ட நடவடிக்கைகளை மீறுதல் | ரூ.500/- (நபர் 1க்கு) |
| 2 | (I) முககவசம் (Mask) அணியாமல் வரும் பொதுமக்களுக்கு | ரூ.200/- (நபர் 1க்கு) |
| | (II) பொது இடங்களில் எச்சில் துப்பினால் | ரூ.500/- (நபர் 1க்கு) |
| | (III) சமூக இடைவெளி கடைபிடிக்காமல் இருத்தல் | ரூ.500/- (நபர் 1க்கு) |
| 3 | நிலையான இயக்க நடைமுறைகள் (Standard Operation Procedures) நடவடிக்கைகளை மீறுதல்<br>1. சலூான்<br>2. அழகு நிலையம்<br>3. உடற்பயிற்சி கூடங்கள்<br>4. சிறுவணிக நிறுவனங்கள்<br>5. வணிக நிறுவனங்கள்<br>6. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் | ரூ.5000/- |

| | | |
|---|---|---|
| 4. | கட்டுப்பாட்டு மண்டலத்தில் வழிகாட்டுதலை பின்பற்ற தவறுதல் | |
| | (I) தனி நபருக்கு | ரூ.500/- (நபர் 1க்கு) |
| | (II) அது தொடர்பான வாகனங்கள் மற்றும் சிறுவணிக நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் | ரூ.5000/- |

மேற்படி கடைபிடிக்காத பட்சத்தில் பேரிடர் மேலாண்மை விதி 2005 பிரிவு 51 முதல் 60 மற்றும் 65 –இன் கீழ் மாநகராட்சி நிர்வாக மூலம் நடவடிக்கை மேற்க்கொள்வதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரித்து ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்.1133/2020/ஹெச்1

## தீர்மானம் எண்.440 – அங்கீகரிக்கப்பட்டது

28. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளை உரக்கிடங்கில் தீயணைப்பு வாகனத்திற்கு தண்ணீர் நிரப்ப வேண்டி Fire House வாங்கிட கடந்த 28.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Rஜெங்கின்ஸ் | மதிப்பீட்டை விட 5.26% குறைவு |
| 2 | திரு.ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் | மதிப்பீட்டை விட 0.52% குறைவு |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட5.26% குறைவாக கொடுத்துள்ள திரு.Rஜெங்கின்ஸ் என்பவருக்கு கூடுதல் வைப்புதொகை ரூ.2,850/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.227/2019-2020

## தீர்மானம் எண்.441 – அங்கீகரிக்கப்பட்டது

29. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையத்திலுள்ள வரிவசூல் மையத்தில் புதிதாக கழிவறை, கவுண்டர்கள், கட்டிடத்தின் மீது கைப்பிடி சுவர், ஏணி படிகள் அமைத்தல் மற்றும் இதர மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு கடந்த 07.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Kமணிகண்டன் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.Kமணிகண்டன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.07% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

மதிப்பீட்டு எண்.36/2020-2021

## தீர்மானம் எண்.442 – அங்கீகரிக்கப்பட்டது

30. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, கருப்பு கோட்டை பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்தின் கதவுகள், Closet மற்றும் மின் இணைப்புகள் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்திட கடந்த 07.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.V.சுபிஷ் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.V.சுபிஷ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

மதிப்பீட்டு எண்.35/2020-2021

## தீர்மானம் எண்.443 – அங்கீகரிக்கப்பட்டது

31. இம்மாநகராட்சிக்குட்பட்ட டெரிக் சந்திப்பில் மட்டன் ஸ்டால் அருகே உள்ள மழைநீர் வடிகால் ஓடையினை சரி செய்திட கடந்த 26.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு. Rவிஜயகுமார் | மதிப்பீட்டை விட 1.06% குறைவு |
| 2 | திரு.Rஜெங்கின்ஸ் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி திரு. Rவிஜயகுமார் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 1.06% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகாரத்திற்கு.

மதிப்பீட்டு எண்.43/2020-2021

## தீர்மானம் எண்.444 – அங்கீகரிக்கப்பட்டது

32. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட இருளப்பபுரம் சந்திப்பில் கழிவுநீர் தேங்கி சுகாதாரகேடு ஏற்படும் நிலையில் இருப்பதால் மேற்படி இடத்தில் கழிவு நீரோடை அமைப்பதற்கும் அதற்கான செலவீனம் ரூ.1,20,000/- பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7183/2020/இ1

## தீர்மானம் எண்.445 – அங்கீகரிக்கப்பட்டது

33. இம்மாநகராட்சிக்குட்பட்ட புத்தேரி மேம்பாலம் அருகில் புளியடி செல்லும் சாலையில் மழைநீர் வடிகால் சிறுபாலத்தில் தடைபட்டு கழிவுநீர் தேங்கி சுகாதாரகேடு ஏற்படுவதாலும், புளியடி சாலையில் தடுப்பு சுவர் சேதமடைந்துள்ளதாலும் மேற்படி சிறுபாலம் மற்றும் தடுப்பு சுவர் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.1,20,000/-க்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7186/2020/இ1

## தீர்மானம் எண்.446 – அங்கீகரிக்கப்பட்டது

34. இம்மாநகராட்சிக்கு சொந்தமான சரலூர் மாட்டு சந்தை அருகே உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாக சுற்று சுவர் பழுது சரி செய்து, சுத்தப்படுத்தி வர்ணம் பூசிடவும் அதற்காகும் செலவினம் ரூ.46,000/- பொது நிதியில் ஈடு செய்யவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** மன்றம் அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7784/2020/இ1

## தீர்மானம் எண்.447 – அங்கீகரிக்கப்பட்டது

35. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-20-ன் கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26, பாக்கியா தெருவில் கழிவு நீரோடையுடன் கூடிய காங்கீரிட் தளம் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்ஆ3/3120/2019 நாள்.30.07.2020-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 28.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.J.ஜெகதீஸ்குமார் | மதிப்பீட்டை விட 19.44% குறைவு |
| 2 | திரு. Rவிஜயகுமார் | மதிப்பீட்டை விட 14.96% குறைவு |
| 3 | திரு.சுபீஸ் | மதிப்பீட்டை விட 14.90% குறைவு |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 19.44% குறைவாக கொடுத்துள்ள திரு.J.ஜெகதீஸ்குமார் என்பவருக்கு கூடுதல் வைப்புதொகை ரூ.33,695/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகாரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.42/2020-2021

## தீர்மானம் எண்.448 – அங்கீகரிக்கப்பட்டது

36. இம்மாநகராட்சிக்குட்பட்ட வேப்பமூடு பகுதியில் தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் அமைக்கப்பட்ட “நாஞ்சில் பஜார்” முன்புறம் பேவர்பிளாக் சாலை, பெயர் பலகை மற்றும் 54 கடைகளுக்கு கதவு அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,20,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 18.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Sஜோசப் மைக்கேல் ராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 8.31% அதிகம்<br>(ரூ.4,78,427/-) |

பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.Sஜோசப் மைக்கேல் ராஜ் என்பவர் மதிப்பீட்டை விட (+)8.31% கூடுதலாக கொடுத்துள்ளமையால் விலை குறைப்பு செய்துதர கேட்டுக்கொண்டதின்படி, மேற்படி ஒப்பந்ததாரர் தமது 17.06.2020 தேதிய கடிதத்தில் விலை குறைப்பு செய்து தர சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதனடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Sஜோசப் மைக்கேல் ராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலை விகிதம்<br>(ரூ.441739/-) |

பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கொடுத்துள்ளதை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.193/19-20/இ1

## தீர்மானம் எண்.449 – அங்கீகரிக்கப்பட்டது

37. நாகர்கோவில் மாநகராட்சியில் 73-வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டும், நாகர்கோவில் நகராட்சி துவக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததை தொடர்ந்தும், மற்றும் கொரானா வைரஸ் நோய் தொற்று பேரிடர் காலத்தில் சிறப்பாக பணியாற்றிய தூய்மை பணியாளர்கள், DBC பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலர்கள் என நாகர்கோவில் மாநகராட்சியில் பணியாற்றிய 1760 நபர்களுக்கும் ஆகஸ்ட் 20-ம் தேதி மதிய உணவாக அசைவ பிரியாணி வழங்கப்பட்டது. மேற்படி உணவு பொட்டலங்கள் அனைத்தும் (ஒன்றின் விலை ரூ.100/- மட்டும்) Sree Abinash Bakers and Restarunt என்ற நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டது. இதில் அந்நிறுவனம் சார்பாக 260 உணவு பொட்டலம் CSR Fund மூலம் இலவசமாக வழங்கப்பட்டது.

மொத்தம் உள்ள 1760 உணவு பொட்டலங்களில், CSR Fund மூலம் தாமாக முன்வந்து வழங்கிய 260 உணவு பொட்டலங்கள் நீங்கலாக மீதமுள்ள 1500 உணவு பொட்டலங்களுக்கும் உணவு பொட்டலம் ஒன்றின் விலை ரூ.100/- என்ற அடிப்படையில் ரூ.1.50 லட்சம் M/s.Sree Abinash Bakers and Restarunt என்ற நிறுவனத்திற்கு அவசரம் கருதி

மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15-ன் கீழ் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட நடவடிக்கை தொடரப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7031/2020/பி2

## தீர்மானம் எண்.450 – அங்கீகரிக்கப்பட்டது

38. இம்மாநகராட்சி எல்கைக்குட்பட்ட வாட்டர் டேங்க் ரோடு, கேசரி தெரு, 78A என்ற முகவரியில் வசித்து வந்த எலிசபெத் க/பெ. சார்லஸ் ரிச்சர்ட்சன் என்பவர் 28.01.2011 அன்று காணாமல் போனதாலும், காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டு இந்நாள் வரை கண்டுபிடிக்க இயலாமல் நீதிமன்றம் மூலம் `உரிமையியல் இறப்பு` அடைந்துள்ளார் என விளம்புகை செய்யப்பட்டதுமாகும். அன்னாருடைய இறப்பு விபரம் இம்மாநகராட்சி இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்ற விபரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதுமாகும். வாரிசுரிமை தொடர்பான மேற்படி வழக்கில் (OS85/2019) மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தி முடித்தவகையில் வழக்கறிஞர் திரு.MSமூர்த்தி அவர்களால் ரூ.5000/-ற்கான பட்டியல் (Advocate fee) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழங்க அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.11478/2018/எச்3

## தீர்மானம் எண்.451 – அங்கீகரிக்கப்பட்டது

39. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் அது சம்பந்தமான அறிக்கைகள் தயார் செய்திட ஏதுவாக கூடுதலாக 5 எண்ணம் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் மாமன்ற கூட்ட அரங்கில் அமைத்திட மின் வசதி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10,700/-க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பெற்றதில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Rஅழகப்பன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலை விகிதம் (ரூ.10,575/-) |
| 2 | திரு.T.ஹரிதாஸ் | மதிப்பீட்டு விலை விகிதத்தில் இருந்து 1.65% அதிகம் (ரூ.10750/-) |
| 3 | திரு.T.நீலகண்ணன் | மதிப்பீட்டில் 6.86% அதிகம் (ரூ.11,300/-) |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.Rஅழகப்பன் என்பவர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கொடுத்துள்ளதை ஏற்கவும், மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி பணிக்கு பணி உத்தரவு வழங்கிடவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5351/2020/இ4

## தீர்மானம் எண்.452 – அங்கீகரிக்கப்பட்டது

40. இம்மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையில் Control Room-ல் இருந்து 60 HP Centrifugal Pump room -க்கு வரும் 120Sq mm UG Cable பழுதடைந்து விட்டதால் புதிய UG Cable அமைக்கவும் 120 HP Turban Motor Pump Room அருகில் உள்ள EB Pole -ல் பொருத்தப்பட்டிருந்த 630 Amps HRC Fuse Unit (3 Nos) பழுதடைந்ததை மாற்றி அமைக்கவும் Control Room-ல் இருந்து 60 HP Centrifugal Pump Room-க்கு வரும் UG Cable இணைக்கப்பட்டுள்ள 630 Amps HRC Fuse Unit (3Nos) பழுதடைந்துள்ளதை மாற்றி அமைக்கவும் மேலும் 60 HP Centrifugal Pump -ல் Unit no -1 மற்றும் 2-லுள்ள 350 mm non-Return Value பழுதடைந்துள்ளதை சரி செய்வதற்கும் உத்தேச செலவு தொகை ரூ.99800/-க்கு (தொண்ணூற்றி ஒன்பதாயிரத்தி எண்ணூறு மட்டும்) பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7178/2020/இ2

## தீர்மானம் எண்.453 – அங்கீகரிக்கப்பட்டது

41. இம்மாநகராட்சி அலுவலகத்தில் Solar மூலம் மின் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் மேற்படி Solar Inverter -ல் பொருத்தப்பட்ட மின் உதிரி பொருட்கள் பழுதடைந்துள்ளதால் மின் உற்பத்தி தடைப்பட்டு கணினி அறையில் உள்ள கணினிகள் பழுது ஆகிறது. எனவே மேற்படி பழுதுகளை சரி செய்திட உத்தேச செலவினம் ரூ.10,030/-க்கு (பத்தாயிரத்தி முப்பது) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பெற்றதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | M/s. Techser,<br>Ashok Nagar, Chennai | ரூ.10,030/- |
| 2 | M/s. MIcrotek<br>NK Road, Trichy | ரூ.10,620/- |
| 3 | M/s. Sukam<br>Ashok Nagar, Chennai | ரூ.11,210/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Techser நிறுவனம் ரூ.10,030/-க்கு கொடுத்துள்ளதை ஏற்கவும், மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கிடவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5593/2020/இ4

## தீர்மானம் எண்.454 – அங்கீகரிக்கப்பட்டது

42. நாகர்கோவில் மாநகராட்சி 52 வார்டுகளிலும் உள்ள பிரதான சாலைகள், உட்புற சாலைகள், பூங்காக்கள், அரசு வளாகங்கள் மற்றும் இதர பகுதிகளில் புல் புதர்கள் அதிகமாக உள்ளது எனவும், திடக்கழிவு மேலாண்மை பணி, டெங்கு பணி, கொரோனா பணி போன்ற அத்தியாவசிய பணிகளில் தூய்மை பணியாளர்கள் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட்டு வருவதால், மேற்படி புல் புதர்கள் அகற்றும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதாகவும், இயந்திரம் மூலம் புல் புதர்களை அகற்ற அனைத்து சுகாதார பிரிவுகளுக்கும் சேர்த்து 16 எண்ணம் இயந்திரங்கள் தேவைப்படுகிறது என துப்புரவு ஆய்வாளர்களின் 01.09.2020-ம் தேதிய அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளதை ஆணையர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளதால், அவசர அவசியம் கருதி 16 எண்ணம் புல் வெட்டும் இயந்திரங்கள் (Model -KK BC 8640) விலைப்புள்ளி பெற்று வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமைக்கும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கும் மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** 1. அங்கீகரிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் / ஆணையர் அவகளின் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6746/2020/எச்1

## தீர்மானம் எண்.455 – அங்கீகரிக்கப்பட்டது

43. இம்மாநகராட்சி வரைபடத்தில் அனைத்து உட்கட்டமைப்புகளும் அடங்கிய வரைபடம் தயாரித்தல் வேலைக்கு கடந்த 04.09.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | Cos Consultancy service | மதிப்பீட்டை விட 5.88% குறைவு |
| 2 | M/s. DB info solution | மதிப்பீட்டை விட 4.71% குறைவு |
| 3 | M/s. Dimension Engineer and surveyor | மதிப்பீட்டை விட 3.65% குறைவு |
| 4 | M/s. Sai skthi Global infra surveys Pvt Ltd. | மதிப்பீட்டை விட 1.58% குறைவு |
| 5 | M/s.Grid Line surveys and Geo spatial Pvt. Ltd., | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 6 | Red leaf Technologies Private Limited | மதிப்பீட்டை விட 1.81% அதிகம் |
| 7 | M/s. True wave Associates | மதிப்பீட்டை விட 1.81% அதிகம் |
| 8 | M/s. MJ Engineering Construction | மதிப்பீட்டை விட 4.00% அதிகம் |
| 9 | M/s. J.Engineers | மதிப்பீட்டை விட 8.60% அதிகம் |
| 10 | Geo pacific solutions (OPC) Pvt Ltd., | மதிப்பீட்டை விட 12.94% அதிகம் |
| 11 | Reform Design and Planning cell PVT Ltd., | மதிப்பீட்டை விட 13.12% அதிகம் |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட பதினொன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி Cos Consultancy service மதுரை நிறுவனம் மதிப்பீட்டை விட 5.88% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று கூடுதல் வைப்பு தொகை ரூ.50000/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.56/2020-2021

## தீர்மானம் எண்.456 – அங்கீகரிக்கப்பட்டது

44. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட அனந்தனார் சானல் கரை தென்றல் நகர் பகுதியில் புதிய பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கும் அதற்கான செலவீனம் ரூ.1,65,000/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7605/2020/இ1

## தீர்மானம் எண்.457 – அங்கீகரிக்கப்பட்டது

45. இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2020-2021 மற்றும் 2021-2022 –ம் ஆண்டிற்கு தேவையான ஹைப்போகுளோரின் ரூ.24,70,000/-க்கு வாங்கி பயன்படுத்துவதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.624/2020/இ3

## தீர்மானம் எண்.458 – அங்கீகரிக்கப்பட்டது

46. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட முதலியார் விளை ஓடை, கோட்டார் Taxi Stand ஓடை முதல் பறக்கின்கால் வரையுள்ள மழைநீர் வடிகால் மண் மற்றும் சகதி நிறைந்து மழைநீர் தாழ்வான பகுதியில் புகுந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பற்ற தன்மை ஏற்படுகிறது. மேலும் வடகிழக்கு பருவமழை ஆரம்பமாக உள்ள நிலையில் முதலியார் விளை ஓடை, கோட்டார் Taxi Stand முதல் பறக்கின்கால் ஓடையில் மண் மற்றும் சகதி அகற்றுவதற்கும் அதற்கான செலவீனம் ரூ.30,000/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7266/2020/இ1

## தீர்மானம் எண்.459 – அங்கீகரிக்கப்பட்டது

47. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32-ல் பரதர் தெரு செல்லும் சாலையில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் பணிக்கு கடந்த 07.08.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Kமணிகண்டன் | மதிப்பீட்டை விட 0.16% குறைவு |

**அலுவலக குறிப்பு-** பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.Kமணிகண்டன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.16% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

மதிப்பீட்டு எண்.38/2020-2021

## தீர்மானம் எண்.460 – அங்கீகரிக்கப்பட்டது

48. இம்மாநகராட்சிக்குட்பட்ட வேம்பனூர் கிழக்கு கிராமம் நில அளவை எண்.796/3,804/13பி2, 804/13பி3 இல் 9025.00 ச.மீ (2.23) ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க கேட்டு திரு.P.ராஜேஷ் மற்றும் திரு.Rமோகன்தாஸ் என்பவர்கள் கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு துறைக்கு விண்ணப்பம் செய்ததில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1053/2020 ககுமாநஊஅ, நாள். 18.08.2020 இன்படி மேற்படி மனைப்பிரிவில் சாலைப்பரப்பளவு 2707.32 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு பரப்பளவு 35.25 ச.மீ மனையையும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து அதன் விபரம் தெரிவிக்க கோரப்பட்டது.

இந்நிலையில் மனை உரிமையாளர்களால் இராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் எண்.2610/2020 இன் படி சாலைப்பரப்பளவு 2707.32 ச.மீ.மற்றும் பொது ஒதுக்கீடு பரப்பளவு 35.25. ச.மீ. மனையையும் ஆணையாளர் பெயருக்கு தானப்பத்திரம் மூலம் பத்திரம் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி சாலைப் பரப்பளவு 2707.32 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு பரப்பளவு 35.25 ச.மீ மனையையும் மாநகராட்சியின் பொறுப்பிற்கும், பராமரிப்பிற்கும் ஏற்றெடுத்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6064/2020/எப்1

## தீர்மானம் எண்.461 – அங்கீகரிக்கப்பட்டது

49. இம்மாநகராட்சிக்குட்பட்ட காலனி கிழக்கு, ராமவர்மபுரம் புல எண்.P3/26 இல் உள்ள நிலவியல் பாதையில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது என தெரிவித்து திரு.பிரசன்னா என்பவரால் தொடரப்பட்ட வழக்கு OS383/2010 மாண்பமை நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில் திரு.பிரசன்னா என்பவர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண்.25/2019 மற்றும் 22/2019 இன் படி மேல்முறையீடு வழக்கு தொடரப்பட்டதில் மேல்முறையீடு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

எனவே இரண்டு வழக்குகளக்கும் தலா ரூ.5000/- வழங்க கேட்டு மாநகராட்சி வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார்கள்.

எனவே மேல்முறையீடு வழக்குகள் 25/2019 மற்றும் 22/2019 இன் வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/- வீதம் இரண்டு வழக்குகளுக்கும் சேர்த்து ரூ.10,000/- மாநகராட்சி வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்களுக்கு வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.13286/2010/எப்1

## தீர்மானம் எண்.462 – அங்கீகரிக்கப்பட்டது

50. இம்மாநகராட்சிக்குட்பட்ட வேம்பனூர் கிழக்கு கிராமம் – நில அளவை எண்.804/9ஏ, 10பி இல் 96.34.00 ச.மீ (2.38 ஏக்கர்) பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க கேட்டு திரு.சுயம்புலிங்கம் மற்றும் மூன்றுபேர் கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு துறைக்கு விண்ணப்பம் செய்ததில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1159/2020-க்கு ககுமாநஊஅ, நாள்.11.09.2020 இன் மேற்படி மனைப்பிரிவில் சாலைப்பரப்பளவு 2817.70 ச.மீ மனையையும் மற்றும் பொது ஒதுக்கீடான பரப்பளவு 34.10 ச.மீ மனையையும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து அதன் விபரம் தெரிவிக்க கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனை உரிமையாளர்களால் இராஜாக்கமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானபத்திரம் எண்.2669/2020 நாள்.25.09.2020 இன் படி சாலை பரப்பளவு 2817.70 ச.மீ மனையையும் மற்றும் பொது ஒதுக்கீடு மனை பரப்பளவு 34.10 ச.மீ மனையையும் ஆணையாளர் பெயருக்கு தானபத்திரம் மூலம் பத்திரம் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி சாலை பரப்பளவு 2817.70 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு பரப்பளவு 34.10 ச.மீ மனையையும் மநாகராட்சியின் பொறுப்பிற்கும் பராமரிப்பிற்கும் ஏற்றெடுத்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7182/2020/எப்1

## தீர்மானம் எண்.463 – அங்கீகரிக்கப்பட்டது

51. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.44, வட்டவிளை ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன் பகுதியில் சமூக இடைவெளி பின்பற்ற வேண்டி முன் பகுதியில் shed அமைப்பதற்கும் அதற்கான செலவீனம் ரூ.2,10,000/- பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7839/2020/இ1

## தீர்மானம் எண்.464 – அங்கீகரிக்கப்பட்டது

52, இம்மாநகராட்சிக்கு சொந்தமான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளேடுகளில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.13419/- தினதந்தி நாளேட்டிற்கு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5913/2020/இ1

## தீர்மானம் எண்.465 – அங்கீகரிக்கப்பட்டது

53. இம்மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 5 HP.Mono block blowers motor மற்றும் Air Compressed blower பழுதடைந்துள்ளதை சரிசெய்ய 12.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 6.76% குறைவு<br>(தொகை ரூ.54910/-) |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 6.76% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவரது ஒப்பந்தபுள்ளியினை ஏற்கவும் கூடுதல் வைப்பு தொகை ரூ.1190/- 24.09.2020-ம் தேதியில் செலுத்தியுள்ளார். எனவே மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5249/2020/இ2

## தீர்மானம் எண்.466 – அங்கீகரிக்கப்பட்டது

54. இம்மாநகராட்சி கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pump house III -ல் 30 HP.Submercible motor பழுதடைந்ததை சரிசெய்வதற்கு 04.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.53% குறைவு<br>(தொகை ரூ.45870/-) |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட (-)0.53% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏ,ற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5914/2020/இ2

## தீர்மானம் எண்.467 – அங்கீகரிக்கப்பட்டது

55. இம்மாநகராட்சி கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pump house IV-லுள்ள Panel board 250 Amps MCCB பழுதடைந்துள்ளதை புதிதாக மாற்றி அமைப்பதற்கு 12.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.16% குறைவு<br>(தொகை ரூ.62600/-) |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.16% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏ,ற்கவும்

பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5248/2020/இ2

## தீர்மானம் எண்.468 – அங்கீகரிக்கப்பட்டது

56. இம்மாநகராட்சிக்குட்பட்ட WCC சாலை புல எண்.E12/10,12 கதவு எண்.209 இல் இசைவளிக்கப்பட்ட வரைபடங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் மாறாக திரு.Sஹாஜாஹுசைன் என்பவர் கட்டடம் கட்டியதால் தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 56&57 இன் கீழ் வழங்கப்பட்ட படிவம் I-க்கு எதிராக கட்டட உரிமையாளரால் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD) No.11635/2019 மற்றும் WMP(MD) No.8863/2019 வழக்கில் 9.5.2019-ல் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வழக்கில் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வாதாடியமைக்காக திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் மன்ற அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

க.வி.எண்.874/2016/எப்2

## தீர்மானம் எண்.469 – அங்கீகரிக்கப்பட்டது

57. இம்மாநகராட்சிக்குட்பட்ட கேப்ரோடு புல எண்,.Q1/54, 55 (pt) இல் திரு.அப்துல்நாசர் என்பவரால் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு தொடர் நடவடிக்கை மாநகராட்சியில் மேற்கொண்டதை தொடர்ந்து கட்டட உரிமையாளர் வழக்கு SA No.9/2012 இன் படி வழக்கு தொடர்ந்து மேற்கண்ட வழக்கானது மாநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட தீர்ப்பினை எதிர்த்து கட்டட உரிமையாளர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு எண்.SLP9177&9178/2019 வழக்கு தொடரப்பட்டதில் மாநகராட்சி சார்பில் திரு.சோமசுந்தரம் வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்து வழக்கினை நடத்தி வருகிறார்.

எனவே மேற்கண்ட உச்சநீதிமன்ற வழக்கு எண். SLP9177 &9178/2019 இல் மாநகராட்சி சார்பில் ஆஜராகியமைக்கும் திரு.சோமசுந்தரம் வழக்கறிஞருக்கு வழக்கறிஞர் கட்டணம் செலுத்தவும் மற்றும் வழக்கிடை செலவு தொகை வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1479/2012/எப்1

## தீர்மானம் எண்.470 – அங்கீகரிக்கப்பட்டது

58. இம்மாநகராட்சிக்குட்பட்ட கேப்ரோடு புல எண்.Q1/54,55(pt) இல் அனுமதியற்ற கட்டுமானத்தின் தொடர் நடவடிக்கை மேற்கொண்டதில் கட்டிட உரிமையாளர் திரு.அப்துல்நாசர் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு

W.P.(MD)No.18908/2019 மற்றும் W.P.(MD) No.22312/2019 இன் படி வழக்கு தொடரப்பட்டு வழக்கு தீர்ப்பு பெற்றுள்ளது.

மேற்படி இரண்டு வழக்குகளில் மாநகராட்சி சார்பில் திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் ஆஜராகி வாதாடியமைக்காக வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் மன்ற அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1479/2012/எப்1

## தீர்மானம் எண்.471 – அங்கீகரிக்கப்பட்டது

59. இம்மாநகராட்சிக்குட்பட்ட புல எண்.Q2/2, இல் அனுமதியற்ற கட்டுமானம், கட்டட உரிமையாளரால் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க சம்மத கடிதம் கொடுத்ததின் பேரில் வாடகைதாரர் திரு.லெட்சுமணன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு W.P.(MD) No.19121/2019 and WMP (MD) No.15469 and 15471/2019 ஆம் எண்ணாக மாநகராட்சி ஆணையாளர் அவர்களை 3-ஆம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி வழக்கின் மாநகராட்சி சார்பில் திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை மாநகராட்சிக்கு சாதகமாக முடித்துள்ளதால் திரு.P.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கு மன்ற அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5931/2019/எப்2

## தீர்மானம் எண்.472 – அங்கீகரிக்கப்பட்டது

60. இம்மாநகராட்சிக்குட்பட்ட புல எண்.D3/2-6 பாலமோர் ரோட்டில் அனுமதிக்கு மாறான கட்டடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56&57 இன் கீழ் பூட்டி முத்திரையிடப்பட்டதை தொடர்ந்து திரு.M.ஷாஜஹான் என்பவர் மூன்றாவது முறையாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No. 7297/2020 வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் ஆஜராகி வாதாடிய வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5932/2019/எப்1

## தீர்மானம் எண்.473 – அங்கீகரிக்கப்பட்டது

61. இம்மாநகராட்சிக்குட்பட்ட இராஜாக்கமங்கலம் ரோட்டில் அனுமதியின்றி கட்டப்பட்ட ராஜாஸ்மால் வணிக வளாகத்திற்கு மாநகராட்சி சார்பில் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56&57 இன் கீழ் அறிவிப்புகள் வழங்கியதை தொடர்ந்து திரு.S.A.ஜாய்ராஜா என்பவர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து மாண்பமை சென்னை

உயர்நீதிமன்றத்தில் W.P.(MD) No.6232/2020 மற்றும் W.P.(MD) No.12755/2020 என வழக்கு தொடர்ந்து மேற்கண்ட வழக்குகளை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி இரண்டு வழக்குகளும் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வாதாடியமைக்காக திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1823/2019/எப்1

## தீர்மானம் எண்.474 – அங்கீகரிக்கப்பட்டது

62. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31, தெற்கு ரதவீதியில் புல எண்.D5/75 கதவு எண்.9-2 இல் அனுமதியற்ற கட்டுமானத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் திரு.RKமணி என்பவரால் வழக்கு W.P.(MD).No.6789/2014 இன் தீர்ப்பின்படி மேற்படி கட்டுமானம் பூட்டி முத்திரையிடப்பட்டது.

இந்நிலையில் மேற்படி வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து திரு.RKமணி என்பவரால் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண்.W.P(MD)No.18132/2017 தொடரப்பட்டு மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

எனவே மேற்படி வழக்கு W.P.(MD) No.18132/2017 இல் ஆஜராகி வாதாடியமைக்காக திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞருக்கு வழக்கறிஞர் கட்டணம் செலுத்தவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7398/2014/எப்1

## தீர்மானம் எண்.475 – அங்கீகரிக்கப்பட்டது

63. இம்மாநகராட்சிக்குட்பட்ட புல எண்.A1/43-12 இல் ஒரு பகுதியில் அமைந்துள்ள திட்டச்சாலை மீது அமைந்துள்ள அனுமதியற்ற கட்டுமானம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீது மனுதாரர் திரு.வில்லியம் ஜெபேஸ் பென்சாம் என்பவரால் தொடரப்பட்ட மேல்முறையீடு விண்ணப்பத்தின் மீது அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை எதிர்த்து மனுதாரர் தொடரப்பட்ட வழக்கு W.P.(MD)No.8972/2020 தள்ளுபடி செய்யப்பட்டு 12.08.2020 இல் தீர்ப்பு வழங்கப்பட்டள்ளது.

எனவே மேற்படி வழக்கு W.P.(MD)No.8972/2020 இல் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வாதாடியமைக்காக திரு.P.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் மன்ற அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு-** அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.17998/2014/எப்1

## தீர்மானம் எண்.476 – அங்கீகரிக்கப்பட்டது

64. இம்மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா மற்றும் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையங்களுக்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்திட மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.31840/2019, நாள்.20.10.2019 – இன் படி நாகர்கோவில் ஆம்னி பேருந்து முகவர்கள் நலச்சங்கத்திற்கு வேண்டி அதன் தலைவர் திரு.ஆர்.வேங்கடவரதன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் மாதா மாதம் வசூல் செய்து மாநகராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டு வந்தது கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையாக அரசின் ஊரடங்கு மற்றும் தடை உத்தரவினை தொடர்ந்து 24.03.2020 முதல் பேருந்துகள் மேற்படி பேருந்து நிலையங்களுக்கு வரவில்லை. இதனால் மேற்படி பேருந்து நிலையங்களில் பேருந்துகளின் நுழைவு கட்டணம் வசூல் செய்திட இயலவில்லை. துறை ரீதியாக வசூல் செய்திட 6 நபர்கள் பணியமர்த்தும் சூழலில் தற்போது மாநகராட்சி பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதால் ஒருவருக்கு ஊதியம் கணக்கிட்டால் அதிக அளவு வருவாய் இழப்பு மற்றும் அலுவலக பணி பாதிக்கும் சூழல் உள்ளது. தமிழக அரசு ஊரடங்கில் சில தளர்வுகளை அறிவித்தின் பேரில் 07.09.2020 முதல் பேருந்துகள் பேருந்து நிலையங்களுக்கு வந்து செல்ல இருப்பதால் அதன் அடிப்படையில் குத்தகை உரிமதாரர் திரு.ஆர்.வேங்கடவரதன் மேற்படி பேருந்து நிலையங்களில் வரக்கூடிய பேருந்துகளின் நுழைவு கட்டணத்தை வசூல் செய்து நிலைமை சீராகும் வரை தற்காலிகமாக தினசரி மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திடவும், முழு அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டதும் ஏற்கனவே வழங்கப்பட்ட உத்தரவின்படியான தொகையினை மாதா மாதம் மாநகராட்சியில் செலுத்தி வரவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1266/2017/அ8

## தீர்மானம் எண்.477 – அங்கீகரிக்கப்பட்டது

65. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலைய கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்திற்கு தெற்கு பக்கம் ஏற்கனவே உள்ள இருசக்கர வாகன காப்பகத்துடன் வடசேரி பேருந்து நிலையத்திற்கு தெற்கு பக்கம் உள்ள காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு உரிமதாரர்களால் உரிமத்தொகை செலுத்தப்படவில்லை. இதனால் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை நாள்.19.06.2020-இன் படி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கொரோனோ வைரஸ் நோய் தொற்று காரணமாக மாநகராட்சி நிர்வாக நலன் கருதியும், பொது நலன் கருதியும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டது.

கொரோனோ வைரஸ் நோய் தொற்று காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வ்டசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் வந்து

செல்லாததால் வாகன போக்குவரத்து இல்லாததால் 01.04.2020 முதல் கட்டணம் வசூல் செய்ய இயலாத நிலையில் தற்போது ஊரடங்கில் சில தளர்வுகளின் அடிப்படையில் வ்டசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் வாகன போக்குவரத்து குறைவான அளவில் துவங்கியுள்ளது. எனவே வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலைய கட்டண கழிவறையில் ஏற்கனவே உள்ள கட்டண விகிதங்களின் அடிப்படையில் சிறுநீர் கழித்தல் ரூ.1/- , கழிவறை கட்டணம் ரூ.2/-, குளியல் ரூ.3/- கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்திற்கு தெற்கு பக்கம் ஏற்கனவே உள்ள இருசக்கர வாகன காப்பகம் மற்றும் வடசேரி பேருந்து நிலையத்திற்கு தெற்கு பக்கம் உள்ள காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு இரு சக்கர வாகனத்திற்கு ரூ.10/- வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு தற்போது வந்து செல்லும் வாகனங்களுக்கு மாநகராட்சி வருவாய் நலன் கருதி 2020-2021 ஆம் ஆண்டிற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு உரிமம் ஒப்படைக்கும் வரையில் ஏற்கனவே உள்ள கட்டண விகிதங்களின் அடிப்படையில் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு துறை மூலம் கட்டணம் வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1266/2017/அ8

## தீர்மானம் எண்.478 – அங்கீகரிக்கப்பட்டது

66. இம்மாநகராட்சி வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம், பழக்காய் உறை குழி மற்றும் ஏலம் போகாத 56 எண்ணம் கடைகளுடன் வருங்காலத்தில் கடையினை நடத்த இயலாமல் ஒப்படைக்கப்படும் கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் உரிமம் 2020-2021-ம் ஆண்டுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மன்ற தீர்மானம் எண்.27, நாள்.31.01.2020-ன் படி திரு.T.ராஜன் த/பெ.தங்கையன் என்பவருக்கு 11.01.2020 முதல் 31.03.2020 வரையில் சோதனை அடிப்படையில் தினசரி ரூ.13809/-ஐ மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தும் விதத்தில் தற்காலிகமாக உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் சந்தையானது கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையின் காரணமாக 24.03.2020 அன்று மூடப்பட்டது. மேற்படி சந்தையானது ஊரடங்கு தளர்வின் காரணமாக 07.09.2020 முதல் கட்டுபாடுகளுடன் திறக்கப்பட்டது. மேற்படி சந்தையிலுள்ள 260 கடைகளையும் ஐந்து பிளாக்குகளாக பிரித்து கடைகள் கட்டணம் வசூல் செய்தல் உரிமம் மற்றும் சந்தை நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம் மற்றும் பழக்காய் உறைகுழியில் கட்டணம் வசூல் செய்தல் உரிமங்களாக ஆண்டு குத்தகை இனமாக கொண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது காரணமாக உரிமம் ஒப்படைக்கும் வரை மேற்படி உரிமதாரரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்டவாறு தினசரி கட்டணம் வசூல் செய்து மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திவர அனுமதிக்கப்பட்டது. உரிமதாரரின் 07.09.2020 தேதிய மனுவின்படி வியாபாரிகள் கடைகளை திறக்காமலும், சந்தை வாசல்கள் முழுமையாக திறக்கப்படாமல் கட்டுப்பாட்டுடன் உள்ளதாலும் ஏற்கனவே செலுத்திவரப்பட்ட தொகை ரூ.13809/- செலுத்த இயலாது எனவும் அன்றன்று வசூல் ஆகும் தொகையினை மாதா மாதம் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திவர அனுமதிக்குமாறும் தெரிவித்துள்ளார். மேற்படி

சந்தையில் பொதுமக்கள் வரத்து குறைவாக உள்ளதாலும் வியாபாரம் இன்றி குறைவாக கடைகளே வியாபாரிகளால் திறக்கப்பட்டுள்ளதாலும் நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம், பழக்காய் உறைகுழி மற்றும் 56 கடைகளில் கட்டணம் வசூல் குறைவாக உள்ளது.

மேலும் கட்டணங்களை துறை மூலம் அலுவலக பணியாளர்களை கொண்டு வசூல் செய்திட போதிய பணியாளர்கள் இல்லை என்பதுடன் தினசரி இரண்டு வாசல்களிலும் மூன்று சிப்டாக 6 பணியாளர்களை நியமிக்கும் நிலையில் போதிய வசூல் இல்லாத நிலையில் ஊதியம் கணக்கிட்டால் வருவாய் இழப்பு மற்றும் அலுவலக பணிபாதிப்பு போன்ற சூழ்நிலை உள்ளது. எனவே ஐந்து பிளாக் வாரியாக கடைகள் கட்டணம் வசூல் செய்தல் உரிமம் மற்றும் சந்தை நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம், பழக்காய் உறை குழியில் கட்டணம் வசூல் செய்தல் உரிமம் ஒப்படைக்கும் வரை மேற்படி உரிமதாரர் தினசரி கட்டணம் வசூல் ஆவதை கணக்கிட்டு மாதம் இறுதி நாளன்று இம்மாநகராட்சியில் செலுத்திவரவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.479 – அங்கீகரிக்கப்பட்டது**

67. தமிழக அரசின் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு 24.03.2020 முதல் நாளது தேதிவரை அரசின் ஊரடங்கு உத்தரவு காரணமாக இம்மாநகராட்சி ஆண்டு குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை தொடர இயலாமலும் துறை ரீதியாக வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இயலாத நிலை ஏற்பட்டது. தற்போது ஊரடங்கு உத்தரவில் சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் தற்போது கீழ்கண்ட இனங்களுக்கு 2020-2021-ம் ஆண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்படவேண்டி உள்ளது.

| வ. எண் | உரிமஇனங்களின் விவரம் | கால அளவு (ஒப்படைக்கும் நாள் முதல்) | ஏலப்பொறுப்புத் தொகை ரூ. | தேசியமயமாக்கப் பட்ட வங்கி உத்திரவாத சான்று தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கோட்டார் பாரஉந்து நிலையத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2020-2021 முதல் 2022-2023 வரை | 1,00,000/- | 2,00,000/- |
| 2 | வடசேரி கனகமூலம் சந்தையில் நுழைவு கட்டணம் வசூல் செய்தல், கழிவறை கட்டணம் வசூல் செய்தல் மற்றும் பழக்காய் உறைகுழியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.10,00,000/- | ரூ.6,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.1-க்கு கடை எண்.1 முதல் 32 வரை மற்றும் கடை எண்.65 முதல் 96 வரை 64 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.10,00,000/- | ரூ.6,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 4 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.2-க்கு கடை எண்.33 முதல் 64 வரை மற்றும் கடை எண்.97 முதல் 128 வரை 64 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.10,00,000/- | ரூ.6,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 5 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.3-க்கு கடை எண்.129 முதல் 170 வரை 42 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.8,00,000/- | ரூ.5,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 6 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.4-க்கு கடை எண்.171 முதல் 212 வரை 42 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.8,00,000/- | ரூ.5,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 7 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.5-க்கு கடை எண்.213 முதல் 260 வரை 48 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.6,00,000/- | ரூ.4,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 8 | முதலியார்விளை வாடகை கார் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | 30,000/- | 20,000/- |
| 9 | சரலூார் மீன்சந்தை / காய்கறி சந்தையில் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம் | 2020-2021 முதல் 2022-2023 வரை | 1,00,000/- | 2,00,000/- |
| 10 | நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலைய கட்டண கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் | 2020-2021 முதல் 2022-2023 வரை | 4,00,000/- | 5,00,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | உரிமம். | | | |
| 11 | வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்திற்கு தெற்கு பக்கம் ஏற்கனவே உள்ள இருசக்கர வாகன காப்பகம் மற்றும் வடசேரி பேருந்து நிலையத்திற்கு தெற்கு பக்கம் உள்ள காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | 1,00,000/- | 1,50,000/- |

மேற்கண்டவாறு இம்மாநகராட்சிக்கு சொந்தமான 2020-2021-ம் ஆண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்படவேண்டிய உரிம இனங்களுக்கு தற்போது நடைமுறையில் இருக்கும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் குறிப்பிட்ட இனங்களுக்கு உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மன்ற முன் அனுமதியுடன் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வழி விளம்பரம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும் மற்றும் வடசேரி கனகமூலம் சந்தை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமாக முன் ஏல கூட்டம் நடைபெறும் 28.09.2020 மற்றும் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் 01.10.2020 –ம் தேதிகளில் மேற்படி நடவடிக்கைகளை புகைப்படம் மற்றும் வீடியோவில் பதிவு செய்திட ஆகும் விளம்பர செலவினங்களுக்கும் அங்கீகாரத்திற்கு.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அரசு வழிமுறைகளை பின்பற்றவேண்டி உள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் குத்தகை உரிம இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்திடவும் மன்ற அனுமதிக்காக.

1. மாநகராட்சி சர்.சி.பி. இராமசாமி ஐயர் நினைவு பூங்கா அருகில் மற்றும் கோர்ட் ரோட்டில் சாலை ஓரங்களில் நிறுத்தப்படும் நான்கு சக்கர வாகனங்களுக்கு மட்டும் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம் 2.இம்மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் சந்தையினை சுற்றியுள்ள வெளிப்புறத்தில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத சாலையோர காலியிடத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிம இனத்தினை போக்குவரத்து இடையூறு மற்றும் பாதாள சாக்கடை பணிகள் முடிவடையாததால் மாநகராட்சி நலன் கருதி புதிதாக ஏற்படுத்தப்பட்ட இரண்டு உரிம இனங்களையும் பொது ஏல நடவடிக்கையிலிருந்து நீக்கம் செய்திட மன்ற அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.480 – அங்கீகரிக்கப்பட்டது**

68. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிராமம் புல எண்.பி0/18ல் உள்ள 3 ஏக்கர் 1½ சென்ட் / பரப்பில் செயல்பட்டுவரும் வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் 260 கடைகள் உள்ளது. மேற்படி சந்தையில் உள்ள 260 எண்ணம் கடைகளையும் 2017-18-ம் ஆண்டு முதல் மூன்றாண்டுகால குத்தகை இனமாக கொண்டு தனித்தனியாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 238 கடைகள் மட்டும் உரிமதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 22 எண்ணம் கடைகளுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. இதனுடன் உரிமதாரர்கள் மாத வாடகை செலுத்தாமல் சீல்வைக்கப்பட்ட கடைகள் 34 எண்ணம் உள்ளது. மேற்படி 22+34=56 எண்ணம் கடைகளுக்கு பலமுறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டும் உரிமம் கோர எவரும் முன்வராத காரணத்தால் நகர்மன்ற தீர்மானம் எண்.27, நாள். 31.01.2020-ன் படி சந்தை நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம் மற்றும் பழக்காய் உறை குழியில் கட்டணம் வசூல் செய்தலுடன் 56 கடைகளையும், வருங்காலத்தில் கடையினை நடத்த இயலாமல் ஒப்படைக்கப்படும் கடைகளும் சேர்த்து ஒரே உரிமமாக கொண்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு 11.01.2020 தேதி முதல் திரு.ராஜன் என்பவருக்கு தற்காலிகமாக உரிமம் வழங்கப்பட்டது. அதன்படி தினசரி கட்டணமாக ரூ.13,809/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டது. மேலும் தற்போதைய நிலையில் மேற்படி 56 கடைகளை தவிர்த்து மீதமுள்ள கடைகளின் உரிமதாரர்களும் மாநகராட்சி மூலம் பல நடவடிக்கைகள் மேற்கொண்டும் கடைகளின் மாத வாடகையினை முறையாக செலுத்தாமல் அதிக நிலுவை வைத்து உள்ளதுடன் கடைகளின் உரிமத்தை விட்டு செல்லும் நிலையிலும் உள்ளனர். இவ்வாறான நிலையில் மாநகராட்சிக்கு நிதியிழப்புகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது என்பதால் 260 கடைகளில் மூன்றாண்டு கால குத்தகை இனமாக தனித்தனியாக உரிமதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தினை ரத்து செய்து 260 கடைகளையும் 5 பிளாக்குகளாக கீழ்கண்ட அட்டவணை 1-ன்படி பிரித்து பிளாக் எண்.1-க்கு 64 கடைகளும், பிளாக் எண்.2-க்கு 64 கடைகளும், பிளாக் எண். 3-க்கு 42 கடைகளும், பிளாக் எண்.4-க்கு 42 கடைகளும், மற்றும் பிளாக் எண்.5-க்கு 48 கடைகளாக கொண்டு ஆண்டு குத்தகை இனமாக மாற்றம் செய்தும் மற்றும் சந்தை நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம் மற்றும் பழக்காய் உறை குழியில் கட்டணம் வசூல் செய்தலுடன் 56 கடைகளையும், வருங்காலத்தில் கடையினை நடத்த இயலாமல் ஒப்படைக்கப்படும் கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் உரிமத்தை ரத்து செய்து சந்தை நுழைவு கட்டணம், பழக்காய் உறைகுழி கட்டணம் மற்றும் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் தனி உரிமமாக கொண்டும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் சேர்த்து நடவடிக்கைகள் தொடர்ந்திடவும், கீழ்கண்ட

அட்டவணைகளின்படி கட்டணங்கள் வசூல் செய்திடவும், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் உள்ள நிபந்தனைகள் கீழ்கண்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு கட்டுபாடுகளுக்கு உட்பட்டும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி மன்ற முன் அனுமதியுடன் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு

**அட்டவணை -1**

| வ. எண் | உரிமஇனங்களின் விவரம் | கால அளவு (ஒப்படைக்கும் நாள் முதல்) | ஏலப்பொறுப்புத் தொகை ரூ. | தேசியமயமாக்கப் பட்ட வங்கி உத்திரவாத சான்று தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வடசேரி கனகமூலம் சந்தையில் நுழைவு கட்டணம், கழிவறை கட்டணம் மற்றும் பழக்காய் உறைகுழியில் கட்டணம் வசூல் செய்திடும் உரிமம் | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.10,00,000/- | ரூ.6,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 2 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.1-க்கு கடை எண்.1 முதல் 32 வரை மற்றும் கடை எண்.65 முதல் 96 வரை 64 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.10,00,000/- | ரூ.6,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 3 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.2-க்கு கடை எண்.33 முதல் 64 வரை மற்றும் கடை எண்.97 முதல் 128 வரை 64 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.10,00,000/- | ரூ.6,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 4 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.3-க்கு கடை எண்.129 முதல் 170 வரை 42 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.8,00,000/- | ரூ.5,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |
| 5 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.4-க்கு கடை எண்.171 முதல் 212 வரை 42 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.8,00,000/- | ரூ.5,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | வடசேரி கனகமூலம் சந்தையில் உள்ள பிளாக் எண்.5-க்கு கடை எண்.213 முதல் 260 வரை 48 கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்திடும் உரிமம். | 2020-2021 முதல் 2022-2023 வரை | ரூ.6,00,000/- | ரூ.4,00,000/- மற்றும் மின்கட்டண பொறுப்புத் தொகை ரூ.2,00,000/- |

| அட்டவணை -II | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | **இனம்** | **தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் ரூ.** | **புதிதாக நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூ.** | |
| 1. | தலைசுமை | 10.00 | 15.00 | ஒரு தடவை |
| 2. | கோழி, கைசுமை, புல்கட்டு | 5.00 | 10.00 | ஒரு தடவை |
| 3. | சைக்கிள் / இருசக்கர வாகனம் பாரத்துடன் (மூடை ஒன்றிற்கு) | 10.00 | 15.00 | ஒரு தடவை |
| 4. | ஆட்டோ (பாரத்துடன்) மூன்று சக்கரம் | 40.00 | 60.00 | ஒரு தடவை |
| 5. | ஆட்டோ (பாரத்துடன்) நான்கு சக்கரம் | - | 100.00 | ஒரு தடவை |
| 6. | டிம்போ (பாரத்துடன்) | 150.00 | 200.00 | ஒரு தடவை |
| 7. | லாரி (பாரத்துடன்) | 200.00 | 300.00 | ஒரு தடவை |
| 8. | கைவண்டி / தள்ளுவண்டி பாரத்துடன் | 20.00 | 40.00 | ஒரு தடவை |
| 9. | ஆட்டோ பொருட்களை உள்ளிருந்து எடுத்துச்செல்ல | 25.00 | 30.00 | ஒரு தடவை |
| 10 | டிம்போ / லாரி பொருட்களை உள்ளிருந்து எடுத்துச்செல்ல | 75.00 | 100.00 | ஒரு தடவை |
| 11 | வடசேரி கனகமூலம் சந்தை <u>கடைகள் தினசரி வாடகை விபரம்</u><br>அ) கடை எண்கள்.1, 2, 3, 4, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 125, 126, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 207, 208, 209, 210, 211, 212, 213, 214, 215, 216, 217, 218,<br>**மொத்தம் -34 கடைகள்** | - | 500.00 | நாள் ஒன்றுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆ) கடை எண்கள். 5, 9, 13, 17, 21, 25, 29, 33, 37, 41, 45, 49, 53, 57, 140, 146<br>**மொத்தம் -16 கடைகள்** | | ரூ.400.00 | நாள் ஒன்றுக்கு |
| | இ) 224, 230, 236, 242, 245, 246, 247, 248, 255, 256, 257, 258, 259, 260,<br>**மொத்தம் -14 கடைகள்** | | ரூ.300.00 | நாள் ஒன்றுக்கு |
| | ஈ) கடை எண்கள். (மேற்படி அ, ஆ மற்றும் இ -ல் உள்ள கடை எண்கள் (ரூ.300/- ரூ.400/-மற்றும் ரூ500/-தவிர்த்து) மீதமுள்ள மொத்த கடைகளுக்கு<br>**மொத்தம் -196 கடைகள்** | | ரூ.200/- | நாள் ஒன்றுக்கு |
| III பழக்காய் உறைக்குழி கட்டணம் | | | | |
| வ.எண் | இனம் | தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் ரூ. | புதிதாக நிர்ணயம் செய்யப்படவேண்டிய கட்டணம் ரூ. | |
| 1 | பழக்காய் குலை | 5.00 | 10.00 | எண்ணம் ஒன்றிற்கு |
| IV மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டண கழிப்பிடங்களுக்கும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் | | | | |
| வ.எண். | இனம் | தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் ரூ. | புதிதாக நிர்ணயம் செய்யப்படவேண்டிய கட்டணம் ரூ. | |
| 1 | சிறுநீர் மட்டும் | 1.00 | 2.00 | ஒரு தடவை |
| 2 | கழிப்பறை | 2.00 | 3.00 | ஒரு தடவை |
| 3 | குளியல் | 3.00 | 10.00 | ஒரு தடவை |
| I. வடசேரி கனகமூலம் தினசரி சந்தைக்கான சிறப்பு கட்டுப்பாடுகள் | | | | |
| 1. | வடசேரி கனகமூலம் தினசரி சந்தையின் உரிமை ஆணை பற்றி இப்பொழுது இருக்கும் விதிகளுக்கும் அரசால் மற்றும் ஆணையரால் அவ்வப்போது விதிக்கப்படும் உத்தரவுகளுக்கும் இனிமேல் ஏற்படுத்தப்படும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். | | | |
| 2. | வடசேரி சந்தை காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்து வைக்கப்படவேண்டும். அட்டவணையில் கண்டுள்ள கட்டணங்களை மட்டுமே வசூலிக்கவேண்டும். மேலும் சந்தையில் வசூல் செய்யப்படும் கட்டண விபரங்கள் எழுதப்பட்ட அறிவிப்பு பலகையை உரிமைதாரர்கள் தனது சொந்த செலவில் எழுதி பொதுவான இடத்தில் பொது மக்கள் பார்வையில் படும் விதமாக தொங்கவிட்டு பாதுகாக்கவேண்டும். | | | |

| | |
|---|---|
| 3. | வடசேரி தினசரி சந்தைக்குள் ஆணையர் ஏதேனும் பொருட்களை அவைகளுக்கு தனியாக ஏற்படுத்தப்பட்ட இடங்களிலாவது குறிப்பிட்ட இடத்திலாவது விற்க முடிவு செய்தால் உரிமையாணை பெற்றவர் அதற்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். |
| 4. | எதிர்பாராத விதமாக ஏற்படும் கலகம், தீ விபத்து, தடுக்க முடியாத தொற்று நோய் காலங்களில் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களினால் தற்காலிகமாக சந்தை மூட சொல்வதற்கு ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு. அப்படிப்பட்ட காலத்திற்கு உரிமையாணை பெற்றவருக்கு யாதொரு இழப்பீடும் கேட்க உரிமை இல்லை. |
| 5 | சீர்திருத்தத்தின் காரணத்திற்காக மாநகராட்சியில் உரிமையாணை பெற்றவருக்கு ஏற்படும் வசதி குறைவுக்கு யாதொரு இழப்பீடும் கேட்க உரிமையில்லை. |
| 6 (1) | கடைகளுக்கு அட்டவணையில் கண்ட விபரப்படிதான் கட்டணம் வசூல் செய்யப்படவேண்டும். |
| (2) | மாநகராட்சி அனுமதியின்றி சந்தைக்குள் தற்காலிகமாகவோ, நிலையாகவோ எவ்வித கட்டிடங்களும், கொட்டகைகளும் கட்டக்கூடாது. அவ்வாறு செய்தால் மாநகராட்சியால் காலி செய்யப்பட்டு அதற்காக ஏற்படும் கூடுதல் செலவு கணக்கிடப்பட்டு உரிமதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும். |
| 7 | கடைகளை எந்த வாணிபத்திற்கு கட்டப்பட்டதோ அதை தவிர வேறு பயன்பாடுக்காகவோ, குடியிருப்புக்காகவோ பயன்படுத்தக்கூடாது. |
| 8 | தொழு நோய் உள்ளவர்களையும் பிற தொற்றுநோய் உள்ளவர்களையும் சந்தைக்குள் அனுமதிக்கக்கூடாது. |
| 9 | பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு இன்றி பொருட்களை கடைகளுக்குள் ஒழுங்காக வைத்து விற்பனை செய்யவேண்டும். ஆணையரோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற அதிகாரியாலோ வழி எந்த முறையில் இருக்க வேண்டுமென்று கூறுகிறாரோ அதையே வழியாக ஏற்க வேண்டும். |
| 10 | சந்தையை குத்தகை உரிமைதாரர்களே தனது சொந்த செலவில் பராமரிக்கப்படவேண்டும். தினசரி சந்தையில் சேரும் குப்பைகளை அகற்றி அதனை மாநகராட்சி உரக்கிடங்களில் கொண்டு சேர்க்கப்படவேண்டும். குப்பைகளை நாள்தோறும் அப்புறப்படுத்த வேணடும். சந்தைக்குள் சேர்த்து வைத்தல் கூடாது. இதற்கு மாநகராட்சியிலிருந்து எந்தவித தொகையும் வழங்கப்படமாட்டாது. |
| 11 | ஹர்த்தால் / வேலை நிறுத்தக்காலங்களுக்கு உரிம கட்டணம் ஏதும் குறைத்து வழங்கப்படமாட்டாது. |
| 12 | சந்தைக்குள்ளோ / சுற்றுச்சுவர்களிலோ விளம்பரம் ஏதும் செய்திட அனுமதிக்கப்படமாட்டாது. |
| 13 | சந்தைக்கு வரும் பொதுமக்கள் புகார் தெரிவிக்கும் விதமாக புகார் பெட்டி பராமரிக்கப்படவேண்டும். அதன் சாவி மாநகராட்சி வருவாய் அலுவலர் வசம் ஒப்படைக்கப்படவேண்டும். |
| 14 | சந்தைக்குள் உள்ள கடைகளில் அரசால் தடைசெய்யப்பட்ட பொருட்கள் ஏதும் விற்பனை செய்திட அனுமதிக்கக்கூடாது. |
| 15 | சந்தைக்குள் உணவகங்கள் ஏதும் செயல்பட அனுமதிக்கக்கூடாது. |
| 16 | சந்தைக்குள் உள்ள வடிகால்கள் உரிமதாரரால் சுத்தமாக பராமரிக்கப்படவேண்டும். |
| 17 | சந்தை சுற்று சுவரில் உரிம காலத்தில் பழுது ஏதும் ஏற்பட்டால் உரிமதாரர் தமது சொந்த செலவில் அதனை சரி செய்யப்படவேண்டும். அதற்கு இழப்பீடு ஏதும் கோரப்படக்கூடாது. கடைகளுக்கான கட்டிட தன்மையினை மாற்றம் செய்யகூடாது. மாற்றம் செய்யப்பட்டது தெரியவந்தால் உரிமம் ரத்து செய்யப்படும். என்பதுடன் இழப்பீடு ஏற்பட்டால் உரிமதாரரையே பொறுப்பாக்கி நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| 18 | குத்தகை / உரிமதாரர் விபரம் / உரிமகாலம் மற்றும் புகார் குறித்து தெரிவிக்கப்படவேண்டிய முகவரி, தொலைபேசி, அலைபேசி எண் விபரங்கள் குறித்த பதிவுகள் சந்தையில் பொதுமக்களுக்கு தெரியும் வண்ணம் விளம்பரபடுத்தவேண்டும். |
| 19 | தீ / வெள்ளம் குறித்த இயற்கை இடர்பாடுகள் போது எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவேண்டும். |
| 20 | சந்தையினை மூடிய பின்னர் இரவு, சந்தையில் எவரையும் தங்க அனுமதிக்கக்கூடாது. சந்தை வளாகத்தினுள் சமூகவிரோத செயல்கள் நிகழுமாயின் உரிமதாரரே பொறுப்பாவார். |
| 21 | சந்தையில் இரவு காவலர்கள் நியமனம் செய்து ரோந்து பணியில் இருக்க உரிமதாரர் நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| 22 | அருகில் உள்ள காவல் நிலையம் / தீயணைப்பு நிலையம் / மருத்துவமனை குறித்த விபரங்கள் சந்தையில் ஆங்காங்கு பொதுமக்களுக்கு தெரியும் விதத்தில் எழுதப்படவேண்டும். |
| 23 | வடசேரி தினசரி சந்தையில் உள்ள பாதுகாப்பு அறை எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் யாவும் உரிய முறையில் உரிமதாரரால் பராமரிக்கப்படவேண்டும் முறையாக பராமரிக்கப்படாமல் ஏற்படும் தடங்கல்களுக்கு உரிமதாரரே பொறுப்பாவார் என்பதுடன் இழப்புகளுக்கு உரிமதாரரின் பொறுப்பு தொகையில் ஈடுகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 24 | சந்தை வளாகத்தினை சுகாதார கேடுகள் இன்றி எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். கழிவுகளை உரிமதாரர் சொந்த பொறுப்பில் அகற்றவேண்டும் இதனால் பொது மக்களுக்கு எந்தவிதத்திலும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது. |
| 25 | உரிமைத்தொகை முழுவதும் ஒரே தவணையில் செலுத்தவேண்டும் என்பதுடன் வருமானவரி, GST மற்றும் தொழில் வரியினை உரியவாறு செலுத்தவேண்டும். |
| 26 | வியாபாரத்திற்கான காய்கறிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்துக்கு இடையூறு இன்றி கடைகளுக்குள் மட்டுமே வைத்து வியாபாரம் செய்யவேண்டும். எக்காரணத்தை கொண்டும் கடைகளுக்கு வெளியே காய்கறிகள் மற்றும் பொருட்களை வைத்து வியாபாரம் செய்யகூடாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும். |
| 27 | கடைகளுக்கு முன்போ அல்லது கடைகளின் பக்கவாட்டிலோ பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் கொட்டகைகள் அமைக்க கூடாது. அவ்வாறு அமைத்தால் மாநகராட்சியால் அப்புறப்படுத்துவதுடன் உரிமதாரரிடம் இழப்பீடு தொகை வசூல் செய்யப்படும். என்பதுடன் உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| 28 | பிளாக் வாரியாக கடைகள் கட்டணம் வசூல் செய்தல் உரிமம் பெற்றவர்கள் ஏற்கனவே கடைகளை அனுபவித்துவரும் கடைகளில் உள்ள வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வசூல் செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட வியாபாரிகள் கடைகளை விட்டு சென்றால் மட்டுமே வேறு நபர்களுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்யவேண்டும். இது தொடர்பாக புகார்கள் எழாத வகையில் உரிமம் பெற்றவர் நடந்து கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் உரிமத்தினை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| 29 | ஏற்கனவே கடைகளின் உரிமம் பெற்று கடையினை நடத்திவரும் வியாபரிகள் மட்டுமே தொடர்ந்து கடையினை நடத்திட அனுமதிக்கதக்கவர்கள் வேறு நபர்களுக்கோ அல்லது உள்குத்தகைக்கோ கடைகளை ஒதுக்கீடு செய்ய உரிமை கிடையாது. |

| | |
|---|---|
| 30. | ஏற்கனவே கடைகளுக்கு உரிமம் பெற்றவர்களில் மாதவாடகை நிலுவையின்றி செலுத்தியவர்கள் மட்டுமே தினசரி வாடகை செலுத்தி கடைகளை தொடர்ந்து நடத்திட அனுமதிக்கதக்கவர்கள் அவ்வாறு நிலுவை தொகை உள்ளவர்களின் கடைகள் காலி செய்யப்பட்டு வேறு நபர்களுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| **II. கட்டணங்கள் வசூல் செய்தல் தொடர்பான நிபந்தனைகள்:** | |
| 1 | உரிமையாணைப்பெற்றவர் அட்டவணையில் கண்டுள்ளபடி இனங்களுக்கு கட்டண விபரம் குறிப்பிட்ட பற்றுச்சீட்டு தனித்தனியாக அச்சிட்டு மாநகராட்சி முத்திரை பதிக்கப்பட்டுதான் வழங்கப்படவேண்டும். |
| 2 | உரிமையாணை பெற்றவர் எக்காரணத்தைக்கொண்டும் அட்டவணையில் கண்ட கட்டணத்திற்கு கூடுதலாக வசூல் செய்யக்கூடாது. அவ்விதம் வசூல் செய்வதாக சந்தை வணிகர்களிடமிருந்து ஏதாவது புகார் வந்தால் உரிமையாணை பெற்றவர் பேரில் மாநகராட்சி மூலமாக கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் உரிமையாணையினை ரத்து செய்து குத்தகை உரிமைக்கு மறு ஏலம் கோரப்படும். அதனால் ஏற்படும் சகல நஷ்டத்திற்கும் உரிமைதாரரையே பொறுப்பாக்கப்படும். |
| 3 | வடசேரி கனகமூலம் சந்தைக்கு வெளியில் இருக்கும் இடங்களில் எவரையும் விற்பனை செய்திட அனுமதிக்கக்கூடாது மற்றும் விற்பனை செய்வோரிடம் உரிமையாணை பெற்றவர் எக்காரத்தை கொண்டும் கட்டணம் ஏதும் வசூலிக்கக்கூடாது. மேற்படி வெளியில் விற்பனை செய்வதை ஆக்கிரமிப்பாக கருதி அப்புறப்படுத்தப்படும். |
| 4 | சந்தை குத்தகை தொகை வசூல் செய்யும் பணியாளர்கள் விபரம் புகைப்படம் மற்றும் முழு முகவரியுடன் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படவேண்டும். |
| 5 | பணியாளர்களை மாற்றம் செய்திடும் நேர்வில் அதன் விபரம் உடன் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படவேண்டும். |
| 6 | சந்தைக்கு வரும் பொது மக்களின் வாகனங்களுக்கு எந்தவித வாகன கட்டணமும் வசூல் செய்யக்கூடாது. வணிக பயன்பாட்டில் சந்தைக்கு வரும் வாகனங்களுக்கு மட்டுமே இந்த கட்டணம் பொருந்தும். மேலும் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணத்தைவிட கூடுதலாக வசூல் செய்தால் குத்தகைதாரரின் குத்தகை உரிமம் ரத்து செய்யப்படும். |
| 7 | ஒவ்வொரு பிளாக்கிற்கு உரிமம் பெற்றவர்கள் அந்தந்த பிளாக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளுக்கு மட்டுமே கட்டணம் வசூல் செய்யவேண்டும். அடுத்த பிளாக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளில் கட்டணம் வசூல் செய்யவோ, இடையூறுகள் செய்யவோ கூடாது. மேலும் கடைகளின் பக்கவாட்டிலோ, சந்தையிலுள்ள காலியிடங்களிலோ கடைகள் அமைத்தல் கூடாது. கட்டணங்கள் வசூல் செய்ய கூடாது. அவ்வாறு செயல்பட்டது தெரியவந்தால் குத்தகை உரிமம் ரத்து செய்யப்படும். |
| III மின்சாரம் தொடர்பான நிபந்தனைகள்: | |
| 1 | மின் இணைப்பு குண்டு பல்புகள் மற்றும் சோடியம் ஆவிவிளக்குகள் பயன்படுத்துவதை கூடுமான வரை தவிர்க்கப்படவேண்டும். கண்ணாடி மூடிய விளக்குகளையே சந்தைக்குள் பயன்படுத்தவேண்டும். |
| 2 | வடசேரி சந்தையில் உள்ள மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள அனைத்து மின் விளக்குகள் மற்றும் கோபுர மின்விளக்குக்கான மின் கட்டணங்களை ஐந்து பிளாக் கடைகள் உரிமம் பெற்றவர்கள் மற்றும் சந்தை நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம், பழக்காய் உறைகுழி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் பெற்றவர்கள் சமபங்காக கொண்டு செலுத்தவேண்டும். |

| | |
|---|---|
| 3 | வடசேரி தினசரி சந்தையில் கட்டபட்டுள்ள கடைகள், அலுவலக அறை, உட்பட அனைத்து மின் இணைப்புகளுக்கும் மின்வாரியத்திற்கு செலுத்தவேண்டிய மின் கட்டணங்களை உரிமையாணை பெற்றவர்களே "ஆணையர், நாகர்கோவில் மாநகராட்சி" பெயரில் மின்வாரியத்தால் எழுப்பப்படும் கேட்பு தொகையை அந்தந்த மாதங்களில் மின் வாரியத்தில் செலுத்தப்படவேண்டும். மேலும் மின் இணைப்புகள் தொடர்பான கூடுதல் வைப்புத்தொகைகள் மற்றும் இதர தொகைகள் எதுவாயினும் உரிமதாரர்களை மின் வாரியத்தில் செலுத்தவேண்டும். இதற்கு மாநகராட்சி எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது. மின்வாரிய நிபந்தனைகளின்படி அந்தந்த மாதம் செலுத்த தவறினால் ஏற்படும் விளைவுகளுக்கு உரிமையாணைப்பெற்றவர்களே பொறுப்பாவார். |
| 4 | Power factor –ஐ சீரான முறையில் கண்காணித்து ஊக்க தொகை மின்வாரியத்தினால் மாநகராட்சிக்கு கிடைக்கப்பெற வழிவகை செய்யவேண்டும் . |
| 5 | Power factor பராமரித்தல் தொடர்பாக அபராதம் செலுத்தப்படும் நேர்வில் அது உரிமதாரரை சார்ந்தது ஆகும். |
| IV வைப்பு தொகை தொடர்பான நிபந்தனைகள்: | |
| 1 | வடசேரி தினசரி சந்தைக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்புக்கு உரிமைதாரர் மின் இணைப்பு (மின்கட்டணம்)பொறுப்புத் தொகையினை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெறுவதற்கு முன்னால் மாநகராட்சி கருவூலத்தில் ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ செலுத்தவேண்டும். |
| 2 | வங்கி உத்திரவாத சான்று ரூ.100/- மதிப்புள்ள பத்திரத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில், ஆணையரால் நிர்ணயிக்கப்படும் காலகெடுவிற்குள் வாங்கி சமர்பிக்கப்படவேண்டும். |
| 3 | சந்தைக்குள் உள்ள கடைகள் / இடங்கள் தொடர்பாக வியாபாரிகளிடம் வைப்பு தொகையேதும் வசூலிக்கக்கூடாது. தினசரி வாடகை மட்டுமே வசூல் செய்யப்படவேண்டும். |
| 4 | வடசேரி தினசரி சந்தை உரிமம் தொடர்பான பொறுப்பு தொகை மற்றும் கூடுதல் பொறுப்பு தொகை அந்தந்த ஆண்டு வெளியிடப்படும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் உட்பட்டதாகும். |

மேற்படி சந்தையிலுள்ள 260 கடைகளையும் ஐந்து பிளாக் வாரியாக கடைகள் கட்டணம் வசூல் செய்தல் உரிமம் மற்றும் சந்தை நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம் மற்றும் பழக்காய் உறைகுழியில் கட்டணம் வசூல் செய்தல் உரிமங்களை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு உரிமம் ஒப்படைக்கும் வரை இம்மாநகர்மன்ற தீர்மானம் எண்.27, நாள்.31.01.2020-ல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி வடசேரி கனகமூலம் சந்தை

ஏலம் போகாத கடைகள் (56 எண்ணம்) வருங்காலத்தில் கடையினை நடத்த இயலாமல் ஒப்படைக்கப்படும் கடைகள், சந்தை நுழைவு கட்டணம், கட்டண கழிப்பிடம் மற்றும் பழக்காய் உறைகுழியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமதாரரான திரு.T.இராஜன், த/பெ சி.தங்கையன் என்பவர் தொடர்ந்து கட்டணம் வசூல் செய்திடவும் மற்றும் 260 கடைகளில் ஏலம் போகாத கடைகள் (56 எண்ணம்) தவிர்த்து மீதமுள்ள கடைகளின் தற்போதைய உரிமதாரர்கள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று குத்தகை உரிமம் ஒப்படைக்கும் வரை தொடர்ந்து கடையினை நடத்தி மாதவாடகை செலுத்தி வரவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

வடசேரி கனகமூலம் தினசரி சந்தை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டால் வழக்கு செலவினங்களுக்கும் மன்ற அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.481 – அங்கீகரிக்கப்பட்டது**